# இறைநிலை அறிவு

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

வேதாத்திரி பதிப்பகம்
180 காந்திஜி ரோடு
ஈரோடு - 638 001
போன் : 268391

RangaRakes



## பகுதி : 1

## மனிதனும் இறைநிலையும்

மனித இன வாழ்வு மிகவும் மதிப்புடையதாகும். ஏனெனில் மனிதனால் தான் பிரபஞ்சத்தைப் பற்றியும், அதில் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கின்ற சடப்பொருள்கள் பற்றியும், உணர்ச்சிகளை அனுபோகங்களாக உணரக் கூடிய பருவுடலைப் பற்றியும், சிந்தனையும் ஆராய்ச்சியும் செய்ய முடியும். மேலும் காந்த ஆற்றலின் சிறப்பியக்கத் தத்துவ மாகிய அறிவும் மனமும் ஒன்றிணைந்த தத்துவமாகிய ஆன்மாவெனும் கருமையத்தைப் பற்றியும் உணர்ந்து கொள்ள மனிதனால் மட்டுமே முடிகிறது.

மனிதனில் அடங்கியுள்ள கருமையத்தில்தான் பேரியக்க மண்டல இரகசியங்கள் அனைத்தும் அலை வடிவில் சுருங்கி யுள்ளன. அவை எப்போதும் அழியாத வளமுடையன வாகவும், வியப்புக்குரியனவாகவும், புலன்களுக்கு எட்டாத மறைபொருட்களாகவும் உள்ளன. இறைநிலையென்னும் மூலப் பொருள்தான் பிரபஞ்சமாக மலர்ந்து உள்ளது. தத்துவ ஞான ஆராய்ச்சியாளர்களும், விஞ்ஞான ஆராய்ச்சியாளர் களும் இறைநிலையென்ற பேராற்றலை நோக்கியே அனைத்து வழியிலும் தங்கள் தங்கள் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

மனித இனம் தோன்றி எவ்வளவு காலம் சென்று விட் டதோ, அக்கால முழுமையும் இன்று வரையிலும் இறைநிலை யைப் பற்றிய ஆராய்ச்சி நடந்து கொண்டுதான் வருகின்றது.



tamilnavarasam.com

எனினும் தத்துவம், விஞ்ஞானம் எனும் இரண்டு துறைகளிலும் இன்னமும் எவரும் இறைநிலை விளக்கத்தை முழுமையாக ஐயமின்றித் தெரிந்து கொள்ளவில்லை. அதனால் அவர்களால் பிறருக்குத் தெரிவிக்கவும் முடியவில்லை. இந்த வழுக்கல் என்? இதை அறிந்து நாம் தெளிவு பெறவும், மற்றுமுள்ள, வயதாலும் சிந்தனையாற்றலாலும் இறைநிலையை உணரத் தகுதியுடைய எல்லாரும் உணர்ந்து கொள்ளச் செய்யவும் முயல்வோம். இந்த அருள் தொண்டில் வெற்றி பெறுவோம்.

இறைநிலையிலிருந்து பிரபஞ்சம் தோன்றியது என்ற கருத்தே எல்லா வழுக்கல்களுக்கும் காரணம். உண்மையில் இறைநிலையே பிரபஞ்சமாக தன்மாற்றம் (Transformation) அடைந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. இறைநிலை வேறாகவும், பிரபஞ்சப் பொருட்கள் வேறாகவும் இருக்கின்றன என்பதே தவறான கருத்து ஆகும். எந்த ஒரு தோற்றமும், நிகழ்ச்சியும் இறையாற்றலின் பகுதியே ஆகும்.

முதல் விளக்கமாக இறைநிலையை சில அடையாளங்களோடு தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். சாதாரணமாக ஐம்புலனறிவோடு இயங்குகின்ற மனிதர்களுக்கு இறைநிலையைப் பற்றிய உண்மைகளும், விளக்கங்களும் எளிதில் பிடிபடா. என்றாலும், ஆறாவது அறிவு நிலையில் முதிர்ச்சியடைந்தவர்கள் பயிற்சியினால் இறைநிலையோடு கலந்து அதன் உண்மை நிலைகளை உணர முடியும்; உணர்ந்தும் உள்ளார்கள். அந்த அனுபவங்களை அடையாளங்களாகக் காட்டி மற்றுமுள்ள மனித குலத்திற்கு அந்த அருட்பேராற்றலைப் பற்றி விளக்குவது எளிதேயாகும்.



சாதாரணமாக மனிதருக்குள் அறிவு ஆராய்ச்சி நிலையில் சில வழுக்கல்கள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் அவர்களுக்கு ஆறாவது அறிவு இயங்கவில்லை என்றோ, குறைவாக உள்ளது என்றோ கருத்து அன்று. அறிவின் கூர்மையும், நீடித்த சிந்தனையும் மறைபொருட்களை ஆராய்வதற்கு மிகவும் அவசியம். எந்தப் பொருளைப் பற்றி உணர வேண்டுமானாலும் அந்தப் பொருளைவிட நுண்ணிய நிலையில் அறிவு இயங்கப் பழகிக் கொள்ள வேண்டும். இதற்கான முறையான உளப்பயிற்சி அகத்தவம் ஆகும்.

மனிதனிடத்தில் ஜீவகாந்த ஆற்றல் நிலையில் அறிவாகவும், அலையில் மனமாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதே ஜீவகாந்த ஆற்றலான அலையில் மனம் புலன்கள் மூலம் பல பொருட்களைத் தொடர்பு கொண்டு இயங்கும் போது மன அலைக்கு ஒரு சுழல் விரைவு அமைகிறது. இந்த சுழல் விரைவைப் பற்றி இங்கு சிறிது விளக்குகிறேன்.

எந்த அலையானாலும் இறைநிலை என்ற சுத்த வெளியில் விரைவாக ஓடக் கூடியது. சுத்தவெளியோ, புலன்களுக்கு எட்டாமல் இருந்தாலும், தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல் உடையது. ஆகையால் எந்த அலையையும் அது தடுக்கும். இந்தத் தடையினால் அலையின் வேகம் மடிந்து விரைவு கொள்ளும்போது சுழலாக மாறுகின்றது.

மனமானது எண்ணுகின்ற அல்லது உணருகின்ற நிலைகளுக்கேற்ப, ஜீவகாந்த ஆற்றலின் செலவு அமைவதால், மன அலைச் சுழலும் விரைவில் வேறுபடுகிறது. சாதாரணமாக மனித மனமானது நொடிக்கு ஒன்று முதல் நாற்பது வரையிலான சுழல் விரைவில் இயங்கக் கூடியது. இது மனிதப்



RangaRakes
tamilnavarasam.com

பண்பாட்டின் செயல்களுக்கேற்ப, நான்கு வகையாக விஞ்ஞானிகளால் பிரித்துக் கூறப்படுகின்றது.

புலன்கள் இயங்கும்போது, கருமையத்திலிருந்து தொடர்பு கொள்ளும் பொருள் வரையில் ஜீவகாந்த ஆற்றல் மலரும் போது, அந்தப் பொருளின் தடுப்புதான் மனதுக்கு உணர்வாக அமைகிறது. உணர்வு என்பதே தடுப்பும் உரசலும் தான். இந்த தடுப்பு, உரசல் அளவுக்கேற்ப, ஜீவகாந்தத்தின் தன் மாற்ற அளவு வேறுபடுகின்றது. சினம், கவலை, பேராசை, ஆழ்ந்த பாசம் இவற்றால் மனதின் சுழல் விரைவும் அதிகமாகிறது. ஜீவகாந்த ஆற்றலின் செலவும் அதற்கேற்ப அதிகமாகும்.

நாம் பொருட்களை உணருகின்றபோது, புலன்கள் மூலமாக நமது ஜீவகாந்த ஆற்றல் செலவாகும். அப்போது இறைநியதியால் மன அலைச்சுழல் பதினாலு முதல் நாற்பது வரையில் (Beta Wave) அமையும். புலன்களைக் கடந்து அதே மனம் உள்நோக்கி ஆழ்ந்து செல்லும்போது, சுழல் விரைவு குறையும். இந்த நிலைமையில் ஒரு நொடிக்கு எட்டு முதல் பதின்மூன்று சுழல் வரையில் அமையுமேயானால், அதனை அமைதி அலை (Alpha Wave) என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். அதற்கும் நுண்ணியதாக அறிவு இயக்கம் நடைபெறும்போது, (நான்கு முதல் ஏழு வரையில்) பிரபஞ்சப் பொருட்களின் நுண்ணிய ஆற்றல்களோடு தொடர்பு கொள்ளும் நிலையில் சுழல் விரைவு அமையும். இதனைத் தீட்டா அலை (Theeta Wave) என்று கூறுகின்றார்கள்.

மேலும் சுழல் விரைவு குறைந்து மிக நுணுக்கமான இயக்கங்களை அறியும்போது, நொடிக்கு ஒன்று முதல் மூன்று வரையில் மன அலைச் சுழல் விரைவு அமையும். இந்த நிலையில் இந்த மன அலையை டெல்டா அலை (Delta Wave)



என்று சொல்கிறார்கள். இவையெல்லாம் மக்கள் மனதால், புலன் உணர்வால் கணித்துக் கொள்ள முடியாது. விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள மனதை அளக்கும் கருவி (Electro Encephlogram) மூலம் தெளிவாக உணரலாம்.

பொதுவாக பிரபஞ்ச இயக்கம் பருப்பொருள், நுண் பொருள் (சூக்குமம்), அலை நிலை என்ற மூன்று வகையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மனித மனம் எந்தப் பொருளோடும் புலன்கள் மூலமாகவோ, எண்ணத்தின் மூலமாகவோ தொடர்பு கொள்ளும்போது, அந்தந்தப் பொருட்களின் தன்மைக்கேற்ப, சுழல் விரைவு அமையும். இந்த இயக்க விதிப்படி ஆதி நிலையாகிய இறைநிலைக்கும், அதோடு இணையும் போது மனதுக்கும் சுழல் விரைவே கிடையாது. அதனால் இரண்டும் அங்கு ஒன்றாகி இருக்கும். இரண்டு சுழல் முதல் தான் இறைநிலையிலிருந்து மனநிலை வேறுபடும்.

நினைவாலோ, புலன்கள் மூலமாகவோ மூன்றுக்கும் மேற்பட்ட எந்தச் சுழல் விரைவிலும் உரசலும் தடுப்பும் உண்டாகும். இவ்வாறெல்லாம் விரிந்தியங்கும் அலை நிலையான மனமும், அந்த மனதின் அடிப்படை நிலையான இறையாற்றல் என்னும் அறிவும் இறைநிலை என்னும் அருட்பேராற்றலின் தன்மாற்ற நிலைகளே அன்றி வேறொன்றுமில்லை. பரிணாமம் என்றால் ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றுகிறது. தோன்றிய பிறகு இயக்கத்தில் அவைகளுக்கிடையே தொடர்பு இல்லை என்பதாகும். இந்தக் கருத்திற்குப் பதிலாக தன்மாற்றம் (Transformation) என்று கருதிக் கொண்டால் இந்த பிரபஞ்சத்தில் தோன்றிய முதல் இயக்கச் சிறப்பான விண் முதற்கொண்டு மற்ற எல்லா கோள்களும் இறைநிலையின் தன்மாற்ற சிறப்புகளேயாகும்.



RangaRakes

tamilnavarasam.com

இறைநிலைக்கு எதுவுமாகும் சிறப்பாற்றல் இயல்பாக இருக்கிறது. அதற்குக் காரணம் இறைநிலை என்றால் சுத்த வெளியே அன்றி வேறு இல்லை. சுத்தவெளி என்பது ஒன்றுமில்லாத சூன்யம் என்று புலனளவில் மனித இனம் முதன் முதலில் கணித்துக் கொண்டது. ஆயினும் உண்மையில் அது நான்கு வளங்களையும் ஒன்றிணைத்த அருட்பேராற்றலாகும். அவ்வளங்கள் 1. வற்றாயிருப்பு, 2. பேராற்றல், 3. பேரறிவு, 4. காலம். இந்த நான்கு வளங்களையும் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்கவும் முடியாது, இறைநிலையிலிருந்து வேறுபடுத்திக் காணவும் முடியாது. அதனால் இங்கு ஒரு சாம்யத்தைக் கொடுத்திருக்கிறேன்.

**கவி**

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும்
வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்
வற்றாத இந்நான்கும் விண்முதல் ஐம்பூதங்கள்
வான்கோள்கள் உலகம் உயிரினம் ஓரறிவு முதல் ஆறாம்
வற்றாது பெருகிவரும் பிரபஞ்சத்தின் வளர்ச்சியே தன்மாற்றம்
வந்தவை அனைத்திலும் சீரியக்கம் இயல்பூக்கம்
வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிரினத்தில்
வழுவாத செயல்விளைவு நீதியே கூர்தலறம் உண்மை உண்மை.

இறைநிலையானது எவ்வாறு தன்மாற்றத்தில் அகண்ட பெரிய பிரபஞ்சமாக, அதே நேரத்தில் பிரபஞ்சத்தில் காணும் நுண்ணிய நிகழ்ச்சிகளும் விளைவுகளுமாக உள்ளது என்பதை சிறிது ஆராய்ந்து மனதில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இறைநிலையின் இயல்பு என்ன? தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் பேராற்றல். ஆகையால் அது அதனுடைய ஆற்றல் அழுத்தமாகத் தன்னையே நொறுக்கிக் கொண்டு இறைத்துகள்களாக



மாற்றம் பெறுகின்றது. புலன்களுக்கு இந்தத் துகள்கள் தனித் தனியே தோன்றாது. எவ்வாறு எனில் - நீர், காற்று என்ற இரண்டு தத்துவங்களும் நுண்ணிய துகள்களே அன்றி வேறில்லை. அதேபோன்று இறைத்துகள்கள் மிக நுண்ணிய பகுதிகளாக இருந்தாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகப் பார்க்கும்போது, மனித மனதுக்கு வெட்டவெளியாக, சுத்த வெளியாகக் காட்சியாகின்றது. முதன் முதலாக இறைநிலையின் இந்த தன்மாற்றம் நுண்ணிய துகள் பரமாணு என்ற பெயரால் வழங்கப்படுகின்றது. இதனை ஆங்கிலத்தில் ஈதர் (Ether) என்று கூறுகின்றார்கள்.

தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலே பரமாணுவாகவும் தன்மாற்றம் பெற்றிருப்பதனால் ஒவ்வொரு துகளும் தற்சுழற்சி விரைவு உடையதாக அமைகிறது. இந்தத் தற்சுழற்சியில் நுண்துகளும், சூழ்ந்தழுத்தும் பேராற்றலான இறைவெளியும் தொடர்ந்து இயங்கும்போது ஏற்படுகின்ற உரசல் பரமாணுக்களைக் காந்த ஆற்றல் பெற்ற அலை நிலையாக அமைக்கின்றது.

இறையாற்றலின் சூழ்ந்தழுத்தும் தன்மையினால் பரமாணுக்கள் பல ஒன்று கூடும்போது ஆங்காங்கே ஒரு கொத்தியக்கம் ஏற்படுகின்றது. இப்பரமாணுக்களின் கொத்தியக்க நிகழ்ச்சியே அணு என்று கூறப்படும் எப்பொருளுக்கும் மூலக்கூறாக அமைகின்றது. ஒவ்வொரு அணுவும் அதில் அடங்கிய இறைத்துகள் சுழல் விரைவால் தற்சுழற்சி உடையதாகவே இருக்கின்றது. இந்தத் தற்சுழற்சியால், மேலும் மேலும் ஏற்படுகின்ற இடைவெளி நுண்துகளிடையே அமைகின்ற உரசலாக அமைந்து ஒவ்வொரு இறைத்துகளும் காந்தமென்ற பேராற்றலாகத் தன்மாற்றம் பெறுகின்றது.



RangaRakes
tamilnavarasam.com

இவ்வாறு அணுவுக்குள் அமைந்த இறைத்துகள்கள் சுழல் விரைவால் காந்த ஆற்றலாகத் தன்மாற்றம் பெறுகின்ற போது அவை ஒன்றையொன்று விலக்கும் ஆற்றலாக மாற்றம் பெறுகின்றன. இந்த விலக்கும் ஆற்றல்தான் அணுவுக்குள் இருக்கும் இறைத்துகள்கள் வெளியேறி இறை வெளியோடு கலப்புறும்போது, காந்த அலைகளாகத் தன்மாற்றம் பெறுகின்றன. விண் துகள்கள் ஒன்று கூடும் எண் ணிக்கைக்கேற்ப, மூலகங்கள் அல்லது பேரணுக்கள் என்று கூறுகிறோம். ஆங்காங்கு ஏற்படும் அணுக்களின் கூட்டுச் சுழல் விரைவு நிலைகளுக்கேற்ப, ஒவ்வொரு மூலக்கூறும் அலை விரைவில் வேறுபடுகின்றன. அதற்கேற்ப அவற்றில் இருந்து தோன்றும் அலைகளும் வேறுபடும்போது அவை அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக, அதாவது ஐந்து தன்மாத்திரைகளாகவும், இவற்றையெல்லாம் தானே உணர்ந்து கொள்ள ஏற்ற ஆறாவது தன்மையான மனமாகவும் திகழ்கின்றது.

அணுக்களின் கூட்டியக்கச் சிறப்புகளுக்கேற்பப் பலப் பலவான ரசாயனங்களும், அவற்றிலெல்லாம் சிறந்த ஒரு கூட்டியக்கமான ஜீவன்களும் இறைநிலையின் தன்மாற்றத்தினால் ஏற்படுகின்றன. இந்த உண்மைகளையெல்லாம் ஒரு மனிதன் உணர்ந்து கொண்டால் பேரியக்க மண்டல ரகசியங்கள் அனைத்தும் அறிவிற்குத் தெளிவாகிவிடும். இதே போன்று ஜீவன்களின் அமைப்பையும், இயக்கத்தையும், விளைவுகளையும் உணர்ந்து கொண்டால், அதை உயிரியல் (Biology) என்ற ஒரு சிறந்த சாத்திரமாக ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். இனி உயிரின் (Biology) அமைப்பையும், இயக்கத்தையும், விளைவுகளையும் பற்றி விரிவாக விளக்கி எழுதுகிறேன்.



## பகுதி : 2

## பருவுடலும் உயிர்வகையும்

இறைநிலை தன்மாற்றமடைந்து இயங்கும்போது மூன்று தளங்களாக இயங்குகிறது.

1. பருப்பொருள் நிலை :

அணுக் கூட்டங்களால் ஆகிய தோற்றப் பொருட்கள் அனைத்தும் இதில் அடங்கும்.

2. விண்நிலை :

இதனைச் சூக்கும நிலை என்றும் சொல்வார்கள். ஏனெனில் விண் முதலாகிய கூட்டங்கள் அனைத்தையும் புலன்களால் உணரலாம். ஆனால் விண் என்ற நுண்ணிய மூலக்கூறு புலன்களுக்கு எட்டாது. எனினும் எல்லா பருப்பொருட்களிலும் விண்கூட்டமாகிய பேரணுக்கள் (Elements) தொகுதியாக இருக்கிறது. எப்போதும் ஒவ்வொரு பேரணுவிலிருந்தும் தனி விண்கள் பிரிந்து ஓடிக் கொண்டே இருக்கும். அதே போன்று, அந்தப் பேரணுக்களின் தொகுதி சுழல் விரைவு குறையும்போது அளவில் சுருங்கி வேறு சில அணுக்களைச் சேர்த்துக் கொள்ளும். அப்போது அந்த தொகுதியே மாறி விடும். இவ்வாறு பேரணுக்களின் தொகுதியிலிருந்து அணுக்கள் பிரிவதும் கூடுவதும் எல்லா பருப் பொருட்களிலும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இவ்வாறு பிரிந்து கொண்டு அல்லது கூடிக் கொண்டு இருக்கும் தனி அணுக்களின் இயக்கங்களையும், அந்த அணுக்களின் அலைகள் சுழல் விரைவுக்கேற்ப விளைவிக்கும் மாற்றங்களையும் சூக்குமத்தின் ஆற்றல்கள் என்பார்கள்.



RangaRakes
tamilnavarasam.com

இது பேரியக்க மண்டலம் முழுவதும் எல்லா பருப் பொருட்கள் ஊடேயும் அனைத்துத் தோற்றப் பொருட் களையும் ஒன்றிணைத்துக் கொண்டு நடைபெறும் நிகழ்ச்சி யாகும். தனித்த விண்துகள்களை-அவற்றின் தொடர் கூட்டு இயக்கங்களை-உயிர் என்று கூறுகின்றோம். இதுவே சூக்குமு சரீரம். எல்லா ஜீவன்களிடத்தும் இது உள்ளது. இந்தச் சூக்குமப் பொருட்களின் இயக்கத்தையும் விளைவுகளையும் அறிந்த பேரறிஞர்கள் இதனை விண்ணுலகம் என்று கூறுவார்கள்.

3. காந்த அலை இயக்க மண்டலம் :

பேரியக்க மண்டலத்தில் தனியாகவோ கூட்டாகவோ இயங்கிக் கொண்டிருக்கும் விண்துகளிலிருந்து எப்போதும் இறைத் துகள்கள் (காந்த ஆற்றல் பெற்ற துகள்கள்) வெளி யேறிக் கொண்டே இருப்பதனால், அவை இறை நிலையாகிய பெருவெளியோடு கூடும்போது அடையும் தன்மாற்ற விளை வுகள் காந்த அலை இயக்க நியதிகளாகும். அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்பனவெல்லாம் அலை இயக்க விளைவுகளே ஆகும்.

இந்த உண்மைகளை நாம் அறிந்து கொண்டால், இந்த பேரியக்க மண்டலம் மூன்று பகுதிகளாக, ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாததாக உள்ளதை உணரலாம். மூன்றும் சேர்ந்த இயக்க விளைவுகள் வியக்கத்தக்கவைகளாக அமைகின்றன. இதனால் தான் சில நூல்களை இயற்றியவர்கள் மூவுலகம் என்ற பெயரால் பிரபஞ்சத்தை விளக்குகிறார்கள்.

இந்த மூவுலக நிகழ்ச்சிகள் எங்கு இல்லை என்று பிரித்துப் பார்க்க முடியவே முடியாது. எவ்விடத்தும், எப்பொருளிலும், இந்த மூவுலக நிகழ்ச்சிகள் அனைத்தும் இணைந்து இயங்கும்



வியத்தகு ஆற்றல்களை உணர்ந்து கொள்ளும்போதுதான் மனித மனம் அதன் அடித்தளமாகிய அறிவோடு இணைந்து தன்னையும் தன் அடித்தளமான இறைநிலை என்ற அறிவை யும் உணர்ந்து கொள்கிறது. இத்தகைய விரிந்தாற்றும் மன இயல்பு கொண்ட மனிதர்களை மகான்கள் (மகா+ஆன்) என்று சொல்கிறோம். ஆன் என்றால் மனிதன். மகான் என்றால் பெரிய மனிதன். இந்த வார்த்தையை வைணவர்கள் சுத்தத் தமிழில் பெரும் + ஆள் = பெருமாள் என்று கூறி மகிழ்வார்கள்.

இத்தகைய மூவுலகு இயக்க விளைவுகளை நாம் உணரும்போது, உலகின் மீது காணும் அத்தனை சடப் பொருட்களிலிருந்தும் மன இயக்கச் சிறப்பால் இயக்க நிலை பெற்ற ஜீவன்களையும் (உயிரினங்களையும்) உணர்ந்து கொள்கிறோம். மன இயக்கம் *அற்ற* பொருட்களையெல்லாம் சடப்பொருட்கள் என்றும், மன இயக்கம் *பெற்ற* பொருட் களையெல்லாம் உயிர் வகை என்றும் மொழி வழியில் பேசுகிறோம்.

பருவுடல் :

பல்வேறு எண்ணிக்கைகள் அடங்கிய பேரணுக்கள் கூடியதே எந்த சடப்பொருளுமாகும். அவற்றில் ஐம்பூதங்கள் முறையாக ஒன்றையொன்று காத்தும் உதவியும் வரும் அளவில் சேர்ந்து இயங்கும்போது ஐம்பூத அலைகளின் கூட்டு ஒரு சிறந்ததோர் அமைப்பாக, ஒரு வியத்தகு ஆற்றல் பெற்றதாக அமைகின்றது. அந்தக் கூட்டுக்குள் பருப் பொருட் களுடைய கட்டடத்தை பருவுடல் என்று கூறுகின்றோம்.

இந்த உடலுக்குள்ளாக சூக்குமம் இயங்கிக் கொண்டு இருக்கிறது. வெவ்வேறு சிறப்படைந்த அலைகளும் இயங்கிக்



RangaRakes
tamilnavarasam.com

கொண்டிருக்கின்றன. அலைகளெல்லாம் காந்த அலைகள் தானே? அவை வேகமாக இந்தப் பருவுடலில் சுழன்று கொண்டிருக்கும்போது, அதன் மையத்தில் அமையும் அழுத்தம் ஒரு சிறு அளவில் கருமையம் என்ற சிறப்பாக, சிறப்புநிலை யாக அமைகின்றது. உடல் முழுவதும் ஓடிக் கொண்டிருக்கும் காந்த ஆற்றல் அலைகளுக்கெல்லாம் இந்த இடம்தான் காந்த ஆற்றலின் மையமாக அமைந்து கொண்டு, வெளிப்புறம் நடக்கும் எந்த ஆற்றலின் தன்மாற்றமானாலும், அந்தத் தன் மாற்றத்தில் அமைந்த அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவற்றுக்கேற்ப கருமையத்திலிருந்து காந்த ஆற்றல் புலன்கள் மூலமாக வெளியேறி, ஐந்து தன்மாத்திரைகளாகத் தன்மாற்றம் பெற்று இறைநிலையை அடைந்து கொண்டே இருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் சேர்த்து உயிரியக்கம் என்றும் ஜீவன் என்றும் கூறுகிறோம்.

**உயிர் வகை :**

கருமையத்திலிருந்து மூளைக்குச் சென்று புலன்கள் வழியாக இந்தக் காந்த ஆற்றல் இயங்கும் சிறப்புகளை ஜீவகாந்த ஆற்றல் அல்லது உயிர் வகை என்று கூறுகிறோம். இந்த ஆற்றல் இயங்கும்போது ஆங்காங்கே உடலுக்குள்ளாக ஒரு சிறப்பு நிலையைப் பெறுகிறது. அவை எட்டு வகையாகப் பிரிக்கலாம். 1. உடல், 2. உயிர், 3. ஜீவகாந்தம் 4. கருமையம். 5. மூளை, 6. உள்ளம், 7. மனம், 8. புலன்கள்.

கடல், நிலம், ஆகாயம் மூன்றிலும் வாழ் உயிர்வகை எதுவானாலும் இந்த எட்டு வகை சிறப்பியக்கங்களும் உண்டு. இதில் ஒரு இயக்கம் நின்று விட்டாலும், இந்த உடலுக்கு உயிர் வகை என்ற பெயர் இல்லை. சடப்பொருள் என்றே சொல்ல வேண்டும். இதை ஒரு கவியின் மூலம் விளக்கியிருக்கிறேன்.



கவி

உடல் உயிர் ஜீவகாந்தம் கருமையம் மூளை
உள்ளம் மனம் புலன்கள் எட்டு பரிமாணம் ஜீவன்
கடல் நிலம் ஆகாயம் மூன்றிலும் வாழ் உயிர்கட்கு
கணக்கெடுத்த எட்டிலொன்று இயங்கவில்லையென்றால்
விடல்வேண்டும் ஜீவன்என்ற பெயரை அதற்குப்பின்
வேறுபெயர் சடப்பொருளென்றுரைத்திடுதல் நீதி
மடல் விரிந்த பூவெனவே மலர்ந்த மதிகொண்டு
மண்ணுலகில் வாழ்வோர்கள் மயக்கம் நீங்கி வாழ்க.

உயிரினங்களைப் புலன்களின் எண்ணிக்கைக்கேற்ப ஓரறிவு முதல் ஆறறிவு வரை என்று பிரித்துப் பேசலாம். உடலில் உயிராற்றலின் சிறப்பான அலை இயங்கும்போது, இந்த அலைக்கும் மற்ற பொருட்களுக்கும் இடையே ஏற்படக் கூடிய உரசலாலும் தடையாலும் அந்த ஜீவனின் மன அலையானது உணர்வுகளாக இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்ற நான்கு வகையிலும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

இறைநிலையானது துகள்களாகி அவை இணைந்து அணுக்களாகி. அணுக்களின் செறிவு நிலைகளுக்கேற்ப பஞ்ச பூதங்களாகி, பஞ்ச பூதக் கலவையால் அண்டங்கள் பலவாகி வந்த தன்மாற்றத்தில் ஒன்றுதான் உலகம். உலகில் முதலில் தோன்றிய உயிரினம் தாவரங்களாகும். சூடு, குளிர்ச்சி என்ற நிலைகளை தொடு உணர்வாக உணரும் மனம் (அறிவு) அவற்றின் தோலில் அமைந்திருக்கின்றது. அலை இயக்க விதிப்படி இந்த தொடு உணர்வு பெற்ற உயிரினத்தை ஓரறிவு உயிர் என்று மதிக்கிறோம்.



RangaRakes
tamilnavarasam.com

## பகுதி : 3

# அறிவியக்க உண்மைகள்

ஓரறிவு கொண்ட உயிரினமான தாவரம் எதுவென்றாலும் பரிணாமத் தத்துவத்தின்படி அது தொடர்ந்து பிறவி எடுப்பதற்கு அதன் விதைதான் கருமையமாக அமைகின்றது. கருமையம் என்பது இறைநிலையானது தன்மாற்றத்தில் அடைந்து வரும் எல்லா இயக்கங்களையும், அனுபவங்களையும் அலை வடிவில் சுருக்கி அதன் தன்மையாக அமைத்துக் கொண்டு தொடர்ந்து இயங்கும் இறைச் செல்வமாகும்.

தாவரங்கள் எதுவானாலும் அதன் தன்மைகள் யாவும் அதன் வித்தில் அலை வடிவில் சுருங்கி இருக்கும். ஆனால் அது மீண்டும் பிறவித் தொடராக வர வேண்டுமானால், காலத்தால் பூமியில் வைத்து நீர் ஊற்றி வந்தால்தான், அதேபோன்று செடியாக, மரமாக வளர்ந்து வரும். இவ்வாறு பூமிக்குள் புதைத்து நீர் பெற வாய்ப்பில்லாவிட்டால், அந்த வித்துக்குள் அடங்கியிருக்கக்கூடிய தன்மைகளெல்லாம் ஒன்றுகூடி இரண்டறிவு உள்ள ஜீவனாகத் தன்மாற்றத்தில் ஓங்கி வளரும். இதைப் புழு என்று கூறுகிறோம். இதற்குத் தொடு உணர்வோடு சுவையுணர்வு (நாக்கு) அமைகின்றது. இதுதான் ஈரறிவு உயிரினம். தாவரத்திலிருந்து தோன்றும் எந்த மாதிரியான புழுவானாலும், அதற்குத் தன் சக்தியினாலேயே தன்னைச் சுற்றிக் கூடு அமைத்துக் கொள்ளும் வல்லமையுண்டு. கூடு அமைத்துக் கொண்டு இருக்கும்போது, அதற்கு இறக்கை வளரும்.



RangaRakes tamilnavarasam.com

பிறகு அந்தக் கூட்டைக் கடித்து விட்டு வழியேற்படுத்திக் கொண்டு அந்த ஜீவன் வெளியே வந்து விடும். இத்தகைய நிலையில் ஈ முதலிய பறக்கும் வண்டுகள் தோன்றுகின்றன. பல நாட்கள் பறந்த பிறகு இறக்கைகள் விழுந்து விடும். அதே உயிரினம் பூமியில் விழுந்து நகர்ந்து சென்று சில இடங்களில் துளைகளை ஏற்படுத்திக் கொண்டு வாழ முற்படும். இந்தக் காலக்கட்டத்தில் அத்தகைய ஜீவன்களை ஊர்வன என்று சொல்கிறோம்.

இந்த ஊர்வன என்ற நிலையிலிருந்து கால்கள் முளைத்து விடும்போது, அதை நடப்பன என்று அந்த உயிரினங்களுக்கு பெயர் வைத்து விடுகிறோம். நடப்பனவற்றில் எண்ணிறந்த வேறுபாடுகளுடைய உயிரினங்களைக் காண்கிறோம். நடப்பனவற்றில் மேலும் திறன் வாய்ந்து அதன் வித்தின் மூலம் தோன்றுவது ஆறாவது அறிவு நிலையுடைய மனிதனாகும். இது பரிணாமச் சிறப்பால் ஒவ்வொன்றாகக் கூடி மொத்தம் எட்டு வகை சிறப்புறுப்புகளாக ஜீவனின் உடலில் இணைந்து இயங்குகின்றன.

மனிதன் என்ற உருவம் அமைந்த பிறகு அதன் உடலில் ஓடும் ஜீவகாந்த அலை ஆங்காங்கு முடிச்சு மாதிரி அழுத்தம் ஏற்பட்டு, அது ஒவ்வொன்றும் ஒரு சிறப்பான உறுப்பாக அமைந்து விடுகிறது. பருவுடலை முதலாகக் கொண்டு கணக்கிட்டால், அத்தகையச் சிறப்பு உறுப்புகள் அமைப்பு எட்டு ஆகும். இவற்றை முன்னமே ஒரு கவியின் மூலம் விளக்கியிருக்கிறேன். அவை 1.உடல், 2, உயிர், 3, ஜீவ காந்தம், 4. கருமையம், 5. மூளை, 6. உள்ளம். 7. மனம், 8. புலன்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த மனித உருவில் அமையும் கருமையம் பிரபஞ்சத்தின் பரிணாம ரகசியங்கள்



அத்தனையையும் அலை வடிவில் சுருக்கி வைத்திருக்கும் ஒரு தெய்வீக நிதியாகும். பேரியக்க மண்டலத்தில் உள்ள எந்த ஜீவனும் ஒரு சிறிய காந்த இயக்க நிலையமாகும். இவற்றில் மனிதனோ பலவித ஆற்றலை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் வியத்தகு காந்த நிலையமாகும்.

இங்குக் கருமைய அமைப்பும், அதன் இயக்கத் தொடரும் மிகவும் வியப்புக்குரியவை. இறைநிலையும், அதில் தோன்றிய விண்ணின் அலையும் கூடியதே காந்தம் என்று அறிவோம். ஒரு மனிதனின் கருமையத்தை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோமேயானால், இறைநிலையிலிருந்து மனிதன் வரையில் வந்த தன்மாற்ற (பரிணாமம்) வரிசையில் ஏற்பட்ட அனைத்து இயக்கங்களும் மனிதனின் கருமையத்திலும் அடங்கியுள்ளன. ஒரு மனிதன் ஒரு செயலைச் செய்கிறான் என்றால் அந்தச் செயலும், அதன் விளைவுகளும் அனைத்தும் அலை வடிவில் சுருங்கி கருமையத்தில் தன்மைகளாக இணைந்து விடும். இவ்வாறு கூடிக் கொண்டே போகும் செயல்களையும், விளைவுகளையும் வினைப்பதிவு அல்லது வினை விளைவு என்று கூறுகிறோம்.

இங்குப் பதிவு என்றால் முத்திரைப் போடுவதோ, ஏதோ அழுத்தக் குறிப்பாகக் கருமையத்தில் ஏற்படுவதோ அல்ல. கருமையம் முழுமையுமே புதிய புதிய அனுபவங்கள் அத்தனையையும் தன்மைகளில் தன்மயமாக ஆக்கிக் கொள்கிறது. இதனால் இறைநிலையிலிருந்து மனிதன் வரைக்கும் வந்த தன்மாற்ற விளைவுகள் அத்தனையும் கருமையத்தில் ஒன்று கூட விட்டுப் போகாமலும், கெட்டுப் போகாமலும் என்றும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். மனிதத் தொடராக வரக் கூடிய எத்தனைப் பிறவிகள் என்றாலும் இந்தக் கருமையத்



RangaRakes

tamilnavarasam.com

தொடர் மாத்திரம் அனைத்து வாழ்க்கை அனுபவங்களையும் தொடர்பாகக் கொண்டு நீடித்து வரும்.

மரணம் என்ற முடிவு காலத்தில் பருவுடலில் உள்ள செல்களின் அமைப்பு உடைந்து அந்தந்தப் பேரணுக்களில் (Elements) சேர்ந்துவிடும். அதோடு பருவுடல் முடிவு பெற்று விட்டது. ஆனால் இந்தக் கருமையமோ, காந்த ஆற்றலின் திணிவினால் ஏற்பட்டதனால் என்றும் அழியாது. எத்தனை ஆயிரம் பிறவித்தொடர் வந்தாலும், கருமையத் தன்மைகள் மாத்திரம் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். இதனால் தான் ஒருவர் செய்யும் வினைப்பயனானது பல தலைமுறை களுக்குப் பின்னாலும் கூட சந்தர்ப்பத் துணையோடு இயங்கி அனுபவமாக வந்து விடும். இத்தகைய நீண்டகாலத் தொடர் வினைகளின் தொகுப்புகளைச் சஞ்சித கர்மம் என்று கூறுகிறோம்.

மனிதனின் கருமையத்திற்கு உவமை கூறுவதென்றால் இக்காலத்தில் மனித வாழ்வில் பரவலாக உபயோகப்படும் ஒரு மின்சாரக் கருவியான கம்ப்யூட்டரைத்தான் சொல்ல முடியும். கம்ப்யூட்டரில் உள்ள சிப் (Chip) போன்றதே ஜீவனில் உள்ள கருமையம். கம்ப்யூட்டரில் அலையியக்க மாகச் சுருங்கியும் விரிந்தும் ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் அடங்கியிருக்க அவற்றை உபயோகிக்கிறோம்.

இதேபோன்றுதான் மனிதனின் அமைப்பும், அதில் அமைந்துள்ள கருமையம் முதற்கொண்டு எட்டு விதமான சிறப்பு உறுப்புகள் அடங்கியது ஆகும். நீண்டகாலமாக மனித குலம் பிறவித் தொடரை, வினைப்பதிவின் விளைவுகளை, ஆராய்ந்து கொண்டுதான் வருகிறது. எனினும் காந்த ஆற்றல்



தத்துவத்தையும், அதன் கருமைய அமைப்பாக மாறிச் செயல் படுகின்ற உண்மைகளையும் உணர்ந்தால் அல்லாது, பிறவித் தொடரைப் பற்றிய உண்மைகளை விளங்கிக் கொள்ள முடியாது.

மேலும் ஒரு சிறப்பியக்கம் இந்தக் கருமையத்திற்கு உண்டு. கருமையம் காந்த ஆற்றலின் திணிவு. ஆகையினால், பிரபஞ்சத்தில் வாழுகின்ற உயிர்கள் அனைத்திலும் உள்ள கருமையத்தோடு தொடர்பு கொண்டு, அதிலுள்ள அலை வடிவில் சுருங்கி இருக்கக்கூடிய தன்மைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ள முடியும். இதற்குக் கைவல்யமானது, மன தைக் கருமையத்தின் மீது அமர்த்திச் செய்யும் அகத்தவத்தின் மூலம் மனதின் சுழல் விரைவுகளைக் குறைத்துக் கருமை யத்தில் அடங்கியுள்ள சுழல் விரைவுகள் எதனோடும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய முறை. அப்பொழுது, இந்த அகத்தவச் சாதனையாளர்களுக்குத் தனக்கு அப்பாலுள்ள எந்த ஜீவனின் கருமையத்திலும் அமைந்துள்ள உண்மைகள் யாவும் தெளிவாகத் தெரிந்து விடும். இந்த முறையில் மனிதன் பெறுகின்ற பெரும்பேறு ஒன்று, இறையுணர்வு ஆகும். இன் னொரு பேறு, அறிவறியும் பேறு எனப்படும். இந்த இரண்டும் தான் மனிதப் பிறப்பில் அமைந்துள்ள நோக்கமாகும்.

இந்த மனநிலைக்கு அறிவை இணைத்து விட்டால், தேவையற்ற கற்பனையான எண்ணங்கள், விருப்பங்கள் யாவும் முடிவு பெற்று விடும். இதுவே மனித அறிவின் முழு மைப்பேறு. மன அலைச் சுழலை எந்த நிலைக்கும் கொண்டு வந்து, உலகில் வாழக்கூடிய உயிரினங்கள் எதனோடும் தொடர்பு கொள்ளவும் இறைநிலைக்கே வந்து அங்கிருந்து மனிதனான வரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அத்தனையும்



RangaRakes
tamilnavarasam.com

தனது அனுபவமாகவே உணருகின்ற பேறு பெற அகத்தவ மாகிற குண்டலினியோகம் சிறந்ததாகும்.

மனிதப் பிறவியின் முழுமைப்பேறு பரிணாமச் சரித் திரத்தின் சிறந்த நிலையாகும். இதுவரையில் வாழ்வில் ஏற் பட்ட மயக்க நிலைகள் அனைத்தும் மாறிவிடும். இந்த மன நிலையில், தான் செய்த தவறுகளின் பயன்களை ஒரே பிறவி யில் மாற்றியமைத்துக் கொள்ள முடியும். இந்தப் பேறு பெறு வதற்கு எல்லாருடைய அடிப்படை அமைப்பும் ஒரே மாதிரி யாகத் தானிருக்கிறது.

எண்ணம், செயல் இவற்றில் தடமாற்றங்களுக்கேற்பத் தலைமுறைகள் தலைமுறைகளாகப் பிறவித் தொடர் நீளும். அந்தப் பிறவித் தொடர்ச் சக்கரத்தை முறித்து விட்டு, இறை நிலையோடு ஆன்மாவை இணைத்துக் கொள்வதற்கு, முழு மையாகக் களங்கத்தைப் போக்கித் தூய்மை செய்து கொள் வதற்கு அகத்தவப் பயிற்சி இன்றியமையாததாகும்.

அடுத்து வானியல் என்ற தத்துவத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.



## பகுதி : 4

## வானியல்

உலக வாழ்வில் உடலிலும் மனதிலும் ஏற்படக்கூடிய இன்பதுன்ப உணர்வுகளும், அவற்றால் ஏற்படும் அனுபவங் களும் ஊனியல் அல்லது உலக இயல் என்று கூறுவோம். இதற்கு மேலாக அறிவு உயரும்போது, உலகத் தொடர்பான அனுபவங்களோடு பேரியக்க மண்டலமாக இயங்கும் அனைத்து கோள்கள், அவற்றின் இயக்கங்கள், அவற்றின் தொடர்பால் ஏற்படும் விளைவுகள் எல்லாவற்றையுமே தெரிந்து கொள்ளலாம். இறையுணர்வு ஏற்பட்ட பின்பு, வானியல் அறிவு தானாகவே இயல்பாகிவிடும். என்றாலும் அறிவில் தெளிந்தவர்கள், வானியல் உண்மைகளை அறிந்த வர்கள் விளக்கிச் சொல்லிப் பிறருடைய அறிவை மலர்ச்சி யடையச் செய்து நலம் பெறலாம்.

உதாரணமாக, நமக்கு உலக அனுபவங்களைப் பற்றிய எண்ணமும் செயலும் எப்போதும் இருந்து வருகின்றன. இது ஒரு குறுகிய அறிவு என்றுதான் சொல்ல வேண்டும். அறிவு விரிவடையும்போது தானாகவே உலகம், உடல், வாழ்க்கை அனுபவங்கள் அனைத்துக்கும் அப்பாலாக வானியல் அறிவு இயல்பாக வந்துவிடும். வானியல் அறிவு என்றால் என்ன?

நமது நினைவில் எப்பொழுதும் அனுபவ, அனுபோகப் பதிவுகளாக இருப்பது, ‘அசையாது இருக்கும் உலகின் மீது நம் தொழில்களை இயற்றி வாழ்ந்து வருகிறோம்’ என்ப தாகும். உண்மையில் வானியல் அறிவு ஏற்பட்ட பிறகு, ‘நாம்



RangaRakes tamilnavarasam.com

வாழும் உலகம் மணிக்கு 1000 மைல் வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கிறது. இதே உலகம் சூரியனைச் சுற்றி வரும் பாதையில் ஒரு நாளைக்கு 15,50,000 மைல் ஓடிக் கொண்டிருக்கிறது. இத்தகைய உலகத்தின் மீதுதான் பிறந்தோம். வாழ்கிறோம். நாம் ஆகாயத்தில் மிதந்து கொண்டு தான் இருக்கிறோம்' என்ற உண்மை தெரிய வருகிறது. இந்த உண்மையை மறந்ததனால் மனிதனை மனிதன் வேறு படுத்திக் கொண்டு பகை, பிணக்கு, போர் இவையெல்லாம் தோன்றுகின்றன, நிலவுகின்றன.

எனவே மனித அறிவின் சிறப்பு பிரபஞ்சத்தையே தன்னுள் அடக்கிக் கொண்டு வாழத் தகுதியாக இருக்கிறது. இதையொட்டி வாழ்ந்தால், பிரபஞ்சத்தையும் தன்னையும் உருவாக்கியுள்ள பேராற்றலான தெய்வநிலையை மறக்க முடியாது. மறந்து வன்முறைகள் மூலம் தவறான செயல்கள் செய்து ஒருவர் பிறருக்குத் துன்பம் அளிக்கவும் முடியாது. தனிமனிதன் வாழ்விலும் உலக சமுதாய வாழ்விலும் அமை தியே நிலவும்.

வானியல் தத்துவத்தின்படி, இன்னொரு உண்மையை நாம் அறிவில் கொள்ள வேண்டும். கோடானு கோடி கோள்கள் பிரபஞ்ச வெளியில் உலவி வருகின்றன. அவையெல்லாம் ஒன்றுக்கொன்று இடையே ஒரு குறிப்பிட்ட தொலைவை அமைத்துக் கொள்கின்றன. இந்தத் தொலைவு எப்பொழுதும் மாறாமல் இருக்கின்றது. இதற்குக் காரணம் என்ன? சூரிய னையும் பூமியையும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம். இரண்டுக்குமிடையே ஒன்பது கோடி முப்பது லட்சம் மைல் தொலைவு இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக் கிறார்கள்.



சூரியனை உலகம் சுற்றி வரும்போது, அது எந்தப் பக்கம் போனாலும் இந்தத் தொலைவு மாறுவதில்லை. எவ்வாறு எனில், சூரியனும் சுழன்று கொண்டுதானிருக்கிறது. அதே போல பூமியும் தற்சுழற்சி உடையதாகவே இருக்கிறது. இந்த இரண்டு அண்டங்களிலும் உள்ள அணுக்கள் எப் பொழுதும் கரைந்து கொண்டேயிருக்கின்றன. இந்தக் கரைசல் அணுவில் அடங்கியுள்ள இறைத்துகளான ஈதர் எனும் பர மாணுக்களை வெளியேற்றிக் கொண்டே இருக்கின்றன. இதனால் எந்தக் கோளுக்கும் அல்லது பொருளுக்கும் அதைச் சுற்றி ஒரு தள்ளும் ஆற்றலுடைய அலையியக்கம் தொடர்ந்து இருந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

சூரியனில் உள்ள அணுக்களின் எண்ணிக்கையையும், அதிலிருந்து வெளியாகும் தள்ளும் ஆற்றல் உள்ள அலை களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு இதேபோன்று உலகம் என்ற கோளில் உள்ள அணுக்களையும், அதிலிருந்து வெளி யாகும் தள்ளும் அலைகளையும் ஒன்று கூட்டிப் பார்த்தால், இந்த இரண்டு கோள்களின் மொத்த விலக்கும் வேகம் ஒன்பது கோடி மைல்களாகும். இதேபோன்று ஒவ்வொரு கோளுக்கும் அதைச் சுற்றியுள்ள தள்ளும் ஆற்றலுடைய அலையியக்கம் மற்ற கோள்களிலிருந்து விலகி நின்று இயங்க இயல்பாக அமைகிறது.

இந்த உண்மையைக் கருத்தில் கொண்டு வானத்தைப் பார்ப்போம். எத்தனையோ கோடி கோள்கள் இருந்த போதி லும், அவை ஒவ்வொன்றும் அதனதன் இடத்திலும் பாதை யிலும் வழுவாது நிலைத்தும், சென்றும் இயங்கி வருகின்றன. இத்தகைய இயக்க ஆற்றலுக்கு மூலமாகவும் முடிவாகவும் உள்ள பேராற்றலே தெய்வம் என்பதாகும். இதை வரிசைப் படி நினைந்துப் பார்ப்போம்.



RangaRakes tamilnavarasam.com

இறைநிலை ஆதியானது. அது தன்னைத்தானே அழுத்தி நொறுங்கிக் கொள்ளும்போது, இறைத் துகளாக ஈதர் என்னும் நுண்துகளாக மாறுகின்றது. தன்மாற்றம் பெறுகின்றது. ஒவ்வொரு துகளைச் சுற்றியும் இறையாற்றல் சூழ்ந்தழுத்திக் கொண்டிருப்பதனால், அவையெல்லாம் எப்பொழுதும் தற்சுழற்சி பெற்றுக் கொண்டே இருக்கின்றன. இந்தத் தற்சுழற்சி தான் இறைத்துகளுக்குக் காந்த ஆற்றலை உண்டு பண்ணித் தொடர்ந்து இயங்கச் செய்கிறது.

இறைநிலையின் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல் இறைத்துகளை ஆங்காங்கு ஒன்றிணைக்கும் விளைவாகவே இருக்கின்றது. இவ்வாறு தோன்றும் சிறு முடிச்சுகள் அணுவென்ற பெயர் பெறுகின்றன. ஒவ்வொரு அணுவும் இறைத் துகளின் கூட்டமைப்பேயாகும். இறைத்துகள்கள் ஒவ்வொன்றும் சுழன்று கொண்டே இருப்பதனால், அவற்றின் கொத்தியக்கமான அணுவும் தற்சுழற்சி உடையதாகவே இருக்கின்றது. இந்தத் தற்சுழற்சியினால் அணுவுக்குள் அடங்கிய இறைத் துகள்கள் மேலும் மேலும் காந்த ஆற்றலைப் பெற்று, தற்சுழற்சி விரைவு மீறி அவைகளுக்குள்ளாக ஏற்படக்கூடிய விலக்கும் வேகமாக மாறுவதால், அணுக்கள் எப்பொழுதுமே கரைந்து கொண்டே இருக்கும். அவைகளிலிருந்து வெளியேறும் நுண்ணலைகள் (ஈதர் என்னும் பரமாணுக்கள்) காந்த ஆற்றலைப் பெற்றவைகளாகவே இருக்கும்.

இறைநிலையோ ஒரு பாய்மப் பொருளாகும் (Fluid). அதிலிருந்து தோன்றுகின்ற இறைத்துகளும் அவ்வாறே. இந்தப் பாய்மப் பொருள் அலை வடிவாக அழுத்தம் என்னும் ஆற்றலோடு தோன்றினாலும் அவற்றைச் சூழ்ந்து கொண்டிருக்கும் பஞ்ச பூதங்களின் மோதுதலால் அழுத்தம், ஒலி, ஒளி,



சுவை, மணம் என்ற அலைகளாக மாறுகின்றன. இவ்வாறு மாற்றம் அடையும்போது, தன்மாற்ற விளைவுகளை உணர்ந்து கொள்ளும் அலையாகவும் இதே காந்த அலை தகுதி பெறுகிறது.

காந்த ஆற்றல் துகள்கள் அழுத்தம், ஒலி முதலிய அலைகளாக மாறினால், அதோடு அவை இறைநிலையாகி விடும். அருட்பேராற்றலோடு இணைந்து விடும். இதனால் தான் அழுத்தம் முதலான பஞ்ச தன் மாத்திரை விளைவுகளுக்கு நிலைபேறு கிடையாது. இந்த பேருண்மைகளையெல்லாம் உணர்ந்து கொள்ளக்கூடிய மனித அறிவு தனது முழுமை நிலையை அடைந்துவிட, மனிதனே தெய்வம்தான்.

**ஐயப்படாது அகத்தது உணர்வானைத்**

**தெய்வத்தோடு ஒப்பக் கொளல் – திருக்குறள்**

எந்த இறைநிலையிலிருந்து தன்மாற்ற விளைவான நுண்துகள் பரமாணு தோன்றியதோ, அதுவே பரமாணு நிலையிலிருந்து காந்த ஆற்றல் பெற்ற பிறகு, அழுத்தம் முதலான ஐந்துவகைத் தன்மாத்திரைகளாக மாறி, இறைநிலையாகி விடுகிறது. இப்பொழுது பிரபஞ்சத்தை முழுமையாக ஆராய்ந்து பார்ப்போம். இறைநிலை ஒன்றுதான் பேராதாரப் பெரு வெளி என்ற சக்தியாகும். அதன் தன்மாற்றம்தான் இறைத் துகள்கள் முதற்கொண்ட பேரியக்க மண்டலக் காட்சிகள் அனைத்துமாகும். மீண்டும் அவைகளையெல்லாம் காந்த ஆற்றல் பெற்ற அலைத்துகள்களாகித் தன்மாற்றம் பெற்று இறைநிலையில் இணைந்து விடுகின்றன.

இந்த உண்மையை நோக்கும்போது இறைநிலையின் ஒரு நுண்பகுதிதான் நாமும் என்ற உணர்வு தெளிவாக



RangaRakes

tamilnavarasam.com

உண்டாகிறது. இந்தத் தெளிவிலே அன்போடும் கருணையோடும் நம்மோடு வாழும் ஜீவன்களின் உடலுக்கும் மனதுக்கும் துன்பமளிக்காது, எந்த ஜீவனுக்கும் உள்ள துன்பத்தை முடிந்த வரையில் போக்கிக் கொண்டு, அறிவுத் தொண்டாற்றி வாழ்வோம் என்ற முடிவை மறவாமல் செயலாற்றுவோம். அதே பேரின்ப நிலையில் அமைதி பெறுவோம்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.



RangaRakes tamilnavarasam.com